1975 ஏப்ரல் 3]

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : ஒரேயொரு அங்கத்தினர்தான் எங்கள் கட்சியின் சார்பாகப் பேசியிருக்கிறார்கள். எங்கள் கட்சியின் சார்பாக எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும். மற்ற கட்சித் தலைவர்களுக்கும் எப்படிப் பகிர்ந்து சமமாகக் கொடுக்க முடியுமோ அந்த வகையில் பகிர்ந்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 15 உறுப்பினர்கள் பேர் கொடுத்திருக்கிறார்கள். ஐந்து அல்லது ஆறு நிமிஷந்தான் ஒரு உறுப்பினர் பேச முடியும். அதற்கு மேல் ஒன்றும் செய்ய முடியாது.

THIRU B. VENKATASWAMY : Sir, I request that time may be allotted to party strength . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'அக்கார்டிங் டு பார்ட்டி' என்று வந்தால் உங்கள் பார்ட்டிக்கு நேரமே வராது. நீங்கள் ஏன் எழுந்து அதைக் கேட்கிறீர்கள்?

திரு. கே. எ. வகாப் : பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியத்தில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்பு கிறேன்.

பயிருக்கு வரப்பு காவல், செம்பழத் தோட்டத்திற்கு வேலி காவல், மக்கள் சமுதாயத்திற்குப் போலீஸ் காவல்; அந்தப் போலீஸ் காவலுக்கு ஆதாரமான போலீஸ் துறைக்கு கலைஞர் காவலர்; கலைஞருக்கு நாம் காவலராக இருக்க வேண்டுமென்ற ஆவலை நான் சொல்ல விரும்புகிறேன்.

இரண்டு நாட்களுக்கு முன்பு நடைபெற்ற காவல் துறை விவாதத்தில் சூடும் இல்லை, சுவையும் இல்லை என்று சிலர் பேசிக் கொண்டார்கள்; சூடு இல்லை என்று ஒப்புக் கொள்கிறேன். சபை யில் மட்டும் சூடு இல்லை என்பதல்ல, வெளியிலும் துப்பாக்கி சூடு இல்லை. ஆகவே, இங்கு சூடு இல்லை. சுவை இல்லையென்று சொன்னார்கள். அதை ஒப்புக் கொள்ளத் தயாராக இல்லை. அவலச் சுவை, நகைச் சுவை, வீரச் சுவை என்று எல்லாச் சுவை களிலும் பல அங்கத்தினர்கள் பேசிய நிகழ்ச்சிகள் நிறைய இருக்கின்றன.